# இயல் 6.7 - அளவைகள்

பயிற்சி எண் :: 6.7.2.2.G

கால அளவைகள் -
அலகு அடிப்படைக் கணக்குகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.2.9 ]

## கால அளவைகள் - அலகு அடிப்படைக் கணக்குகள் [ த.நா.அ.பு பயிற்சி 2.2.9 ]

சென்னை எழும்பூரிலிருந்து மதுரை வரை செல்லும் வைகை அதிவிரைவு தொடர்வண்டி (எண் 12635)-இன் புறப்படும் நேரம் மற்றும் வந்து சேரும் நேரம் கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட தகவல்களைப் படித்து பதிலளிக்கவும்.

| வ.எ | நிலையம் | வந்து சேரும் நேரம் | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| 1 | சென்னை எழும்பூர் | - | 13:40 |
| 2 | தாம்பரம் | 14:08 | 14:10 |
| 3 | செங்கல்பட்டு | 14:38 | 14:40 |
| 4 | விழுப்புரம் | 15:50 | 15:55 |
| 5 | விருத்தாசலம் | 16:28 | 16:30 |
| 6 | அரியலூர் | 17:04 | 17:05 |
| 7 | திருச்சி | 18:30 | 18:35 |
| 8 | திண்டுக்கல் | 20:03 | 20:05 |
| 9 | சோழவந்தான் | 20:34 | 20:35 |
| 10 | மதுரை | 21:20 | - |

| வ.எ | வினா | விடை |
|---|---|---|
| i | வைகை அதி விரைவு வண்டி எத்தனை மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு மதுரைக்கு வந்து சேருகிறது? | **13:40** மணிக்குச் சென்னை எழும்பூரிலிருந்து புறப்பட்டு **21:20** மணிக்கு மதுரையை வந்து சேருகிறது. |
| ii | சென்னை மற்றும் மதுரைக்கு இடையில் எத்தனை நிறுத்தங்கள் உள்ளன? | சென்னை மற்றும் மதுரைக்கு இடையில் **8 நிறுத்தங்கள்** உள்ளன. |
| iii | விழுப்புரம் நிலையத்தில் எவ்வளவு நேரம் நிற்கிறது? | விழுப்புரம் நிலையத்தில் **5 நிமிடம்** நிற்கிறது |
| iv | சோழவந்தானுக்கு வந்து சேரும் நேரம் என்ன? | சோழவந்தானுக்கு வந்து சேரும் நேரம் **20:34** மணி ஆகும். |
| v | சென்னை எழும்பூரில் இருந்து மதுரை வந்து சேர ஆகும் மொத்தப் பயண நேரத்தைக் காண்க. | இது 13:40 மணிக்கும் 21:20 மணிக்கும் இடையில் உள்ள நேரம் ஆகும். அதாவது, 20 நிமிடம் + 7 மணி + 20 நிமிடம் = **7 மணி 40 நிமிடம்.** |

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 07:41 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**